24th July 1964]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: சோழவந்தான், முள்ளிப் பள்ளம், தென்கரை கிராமங்களை காப்பதற்கு சோழவந்தான் கிராம எல்லையில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டும் ப்ரப்போசல் இருப்பதாக கூறினர்கள். அதை வரவேற்கிறேன். ரெட்டியப் பட்டி, அக்கரைப்பட்டி, தடகோட்டை, கூட்டாத்து, அண்ண அய்யம்பாளையம் இந்த ஊர்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. வெ. ராமையா: தனிக் கேள்வி வேண்டும்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: மதுரையில் வைகை நதி தடுப்புக் கரைச் சுவர் கட்ட சில லட்சம் ரூபாய் ஏற்கனவே ஒதுக்கியிருக்கிறோம். அது எந்த நிலையில் உள்ளது? எப்போது வேலை துவங்கப்படும்?

கனம் திரு. வெ. ராமையா: தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன்: இந்த அரிப்பை தடுக்கக் கட்டப்படும் சுவர்களுக்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை பஞ்சாயத்து கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. அப்படியிருப் பதால் சில பஞ்சாயத்துக்கள் கொடுக்க முடியாத காரணத்தினுல் கரைகள் கட்டப்படாமல் இருப்பதால் ஊர்களுக்கு ஆபத்து வரு வதை அரசாங்கம் உணருகிறதா? ஆகவே அந்தக் கட்டுப்பாட்டை தளர்த்த அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமையா: இரிகேஷன் டிப்பார்ட்மெண்டில் செய்யக்கூடிய வேலைகளுக்கு பெரிய வேலைகளுக்கு பஞ்சாயத்தி லிருந்து அதன் நிதியிலிருந்து பணம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்க மாட்டார்கள். சாதாரண சிறு வேலைகளாக இருக்கும்பட்சத்தில் காண்ட்ரிப்யூஷன் வொர்க்காக இருந்தால் அதுபோல் ஆலோசனை சொல்லியிருப்பார்கள்.

சினிமா தியேட்டர்கள்

*684 கேள்வி—திரு. மா. இராசாங்கம்: கனம் ஸ்தல **நிர்வாக** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சினிமா தியேட்டர்களை நகரசபைகள் எடுத்து நடத்த அனு மதி வழங்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: சென்னை நகரத்தைப் பொறுத்த அளவில், இங்கிருக்கின்ற தியேட்டர்களில் அதிகமான அளவில் வருமானம் வந்துக் கொண்டிருக்கிறது ஆகவே இதை கார்ப்ப ரேஷன் எடுத்து நடத்துவதற்காக அரசாங்கம் அனுமதி கொடுக் குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இப்போது அந்த உத்தேசமில்லை.

[24th July 1964

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, நகரசபைகள் தாங்களாகவே சொந்தமாக தியேட்டர்கள் கட்டுவதற்கு அனுமதி கோரியிருக்கின்றார்களா, அப்படியானால் சர்க்காரால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா ?

திரு. சே. ம. அ. மஜீத்: நகரசபைகளிடமிருந்து அப்படி கோரிக்கைகள் வந்திருப்பதாக தெரியவில்லை. ஆனால் தியேட்டர்-கம்-பப்ளிக் ஹால் கட்டுவதற்கு அனுமதி கேட்கப்பட்டிருந்தது. அவ்விதம் இரண்டு நகரசபைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கு சினிமாக்கள் காட்டப்பட வேண்டும் என்று அவர்கள் கேட்கவும் இல்லை, அரசாங்கம் அவ்விதம் அனுமதி கொடுக்கவும் இல்லை.

திரு. மா. இராசாங்கம்: சினிமா தியேட்டர்களை நகரசபைகள் எடுத்து நடத்துவதற்கு அனுமதி வழங்காமைக்குக் காரணம், தமிழ்நாட்டில் இருக்கின்ற தியேட்டர்களில் பெரும்பாலானவை ஆளும் கட்சியிலுள்ளவர்களிடம் இருக்கின்றது என்ற காரணம் தான் என்று சொல்லப்படுவது உண்மையா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சினிமா உலகத்திற்கும் ஆளுங் கட்சிக்கும் சம்பந்தமே இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான நகராட்சி மன்றங்கள் போதுமான வருமானம் இல்லாததின் காரணமாக வருமானத்திற்கு தவிக்கின்றார்கள். அவர்களது வருமானத்தை பெருக்கிக் கொள்ளுகின்ற வகையில் சினிமாத் தியேட்டர்களை எடுத்து நடத்தலாம் என்ற ஆலோசனை இருந்து வருகிறது. ஆகவே விரும்புகின்ற நகரசபைகள் சினிமா தியேட்டர்களை எடுத்து நடத்துவதற்கு அனுமதி கேட்டால், அனுமதி கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கெனவே பஞ்சாயத்துக்களுக்கு எந்த முறையில் நிதி வசதியை பெருக்கிக் கொள்ளலாம் என்பதைப்பற்றி பஞ்சாயத்து ராஜ் ஃபைனன்ஸ் கார்ப்பரேஷன் ஆலோசனை செய்த போது சினிமாத் தியேட்டர்களை ஏற்றெடுத்து நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி முடிவு எடுத்து மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யும்போது அதைப்பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: சேலம் நகரசபையிலிருந்து இப்படிப்பட்ட சினிமா கொட்டகைகளை எடுத்து நடத்துவதற்கு சர்க்காரை கேட்க வேண்டும் என்று தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதற்கு சர்க்கார் என்ன பதில் எழுதியிருந்தார்கள் ?

கனம் சபாநாயகர்: கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவதிலிருந்து என்ன பதில் எழுதியிருப்பார்கள் என்று தெரியவில்லையா ?

24th July 1964]

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சேலம் நகரசபையிலிருந்து அவ்விதம் தீர்மானம் ஒன்றும் வரவில்லை என்று நினைக்கிறேன். எனக்கு அங்கு வரவேற்பு அளித்தபோது இதைப்பற்றி கூறினர் கள் என்று நினைக்கிறேன்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: தலைவர் அவர்களே, தியேட்டர்-கம்-பப்ளிக் ஹால் கட்ட வேண்டும் என்று மதுரை நகரசபையிலிருந்து விண்ணப்பித்தால் அனுமதி வழங்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: விண்ணப்பித்தால் பரிசீலிக்க லாம்.

திரு. எம். தண்டாயுதபாணி: பஞ்சாயத்து கூட்ட மன்றங்களில் பொது நிதி வேண்டிய அளவுக்கு இருப்பதால், சினிமா தியேட் டர்களை எடுத்து நடத்துவதற்கு அனுமதி கோரினல், அனுமதி கொடுக்கப்படுமா ?

MR. SPEAKER: These are all hypothetical questions. No answer need be given.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஸார், இப்போது தியேட்டர்களுக்கு விதிக்கப்படுகின்ற என்டர்டைன்மென்ட் டாக்ஸில் எத்தனை சத மானம் நகர சபைக்கு கொடுக்கப்படுகிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தனிக்கேள்வி வேண்டும்.

திரு. முனு. ஆதி: தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களில் சினிமாக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும் உரிமையை அதாவது கலக்டர் சிபாரிசு செய்வது என்கின்ற முறையை விட்டு, விட்டு, நகராட்சி மன்றங்களே லைசென்ஸ் கொடுப்பது என்கின்ற உரிமையை கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இதற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

கல்விச் சலுகைக்கு விண்ணப்ப பாரங்கள்

*685 **கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து தமிழ்நாடு திரும்பியோருக்கு கல்விச் சலுகைகள் பெறுவதற்குரிய விண்ணப்ப பாரங்கள் காலா காலத்தில் கிடைப்பதில்லை என்பது உண்மையா ?

(இ) பாரங்கள் காலாகாலத்தில் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH: In order to overcome the difficulties experienced by the children of Ceylon repatriates in obtaining the requisite application forms in time for applying for boarding grants, the Collectors have been instructed to have sufficient number of forms printed locally to meet their requirements.